மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.—

''மானியக் கோரிக்கை எண்—50. பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 37,69,58,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை (29—7—1980) 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.21 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

65. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 26—2—1980 ஆம் தேதியிடப்பெற்ற 533 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின்கீழ்] பேரவை முன் வைக்கப்பெற்றது.

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*115. பாசனம் மீதான மானியக் கோரிக்கை 1980—81 (தமிழ், ஆங்கிலம்).

*116. 1979—80 ஆம் ஆண்டிற்கான பாசனம் மீதான மானியக் கோரிக்கை பற்றிய விவாதத்தின்போது சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துரைகள் மற்றும் குறிப்புரைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கை குறித்த விவர அறிக்கை (ஆங்கிலம்).

*117. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும். (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 29/1980).

---

* 26-7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.